# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 275/2015

ஆணை எண்.92/2016

நாள் :02/05/2016

**23.10.2015 நாளிட்ட
தினமலர் நாளிதழ்
செய்தி – முறையீட்டு மனுதாரர்**

**மாநகர நல அலுவலர்,
மண்டலம் – 9, – எதிர் மனுதாரர்
சென்னை மாநகராட்சி, சென்னை**

23.10.2015 நாளிட்ட சென்னை பதிப்பு தினமலர் நாளிதழில் "ஒரு மாதத்தில் ஒரே ஒரு மருத்துவமனையில் மட்டும் 200 நபர்களுக்கு டெங்கு, சென்னை முழுவதும் ஆயிரக்கணக்கானோர் பாதிப்பு"என்ற தலைப்பில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. மேற்படி செய்தியினை முறையீட்டு மனுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு 275/2015 என்ற எண்ணிட்ட புகார் மனுவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## ஆணை

23.10.2015 நாளிட்ட தினமலர் நாளிதழ் செய்தியில் கீழ்காணும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

1) டெங்கு காய்ச்சலுக்கு 200 நபர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் 90 நபர்கள் மட்டுமே மேற்படி நோயால் பாதிப்படைந்தனர் என மாநகராட்சி தெரிவித்தது.

2) தனியார் மருத்துவமன்ன நோய் பாதிப்பு விவரங்களை அளித்தும் மாநகராட்சி நோய் பதிவினை ஏற்றாமல் மறைத்தது.

3) நோய் தகவல் மறைப்புக்கு உடந்தையாக செயல்பட்ட அதிகாரிகள்.

2. மேற்படி செய்தி சம்பந்தமாக சென்னை மாநகராட்சி சுகாதார அலுவலரிடம் அறிக்கை கோரப்பட்டது. அறிக்கை இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்படாத நிலையில் 09.03.2016 அன்று விசாரணைக்கு வருமாறு மாநகர நல அலுவலருக்கு அழைப்பாணை அனுப்பட்டது. மாநகர நல அலுவலர் பொறுப்பினை வகிக்கும் டாக்டர் என்.ஏ. செந்தில்நாதன் விசாரணைக்கு ஆஜராகி கீழ்காணும் விவரங்களை தாக்கல் செய்தார்.

1) மண்டலம் - 9க்கு உட்பட்டுள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் ஆய்வகங்களில் தினமும் தொற்று நோய் குறித்த தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

2) மண்டலம் - 9க்கு உட்பட்ட தனியார் மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட தொற்று நோய் அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நோய் பரவுதல் தடுக்கப்பட்டது.

3) 2015 செம்டம்பர் மாதம் தனியார் மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட தொற்று நோய் அறிக்கையின் படி 103 நபர்கள்தான் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தனர். என்றும் நாளிதழ் செய்தியில் குறிப்பிட்டது போல் 200 நபர்கள் அல்ல என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) Dengu 1 gm Elisa முறையில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் 3 நபர்கள் மட்டுமே டெங்குவால் பாதிக்கப்பட்டிருந்தனர் என கண்டறியப்பட்டது.

2015 ஆம் ஆண்டு இறுதியில் பெய்த வரலாறு காணாத மழையின் காரணமாக தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கப்பட்டன என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மழைக்கு பிந்தைய மாதங்கள் டெங்கு காய்ச்சல் சம்பந்தமான புகார்கள் எதுவும் இல்லை. மாநகராட்சி மேற்கொண்ட தடுப்பு நடவடிக்கை காரணமாக தொற்று நோய்கள் பரவுவது முற்றிலுமாக தடுக்கப்பட்டுள்ளது. தொற்று நோய்கள் குறித்த செய்திகள் எதுவும் தற்போது இல்லை எனவே இக்கோப்பின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்துக்கொள்ள இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

உதவி பதிவாளர்

பெறுநர்

மாநகர நல அலுவலர்,
சென்னை பெருநகர மாநகராட்சி,
சென்னை.

மண்டல நல அலுவலர்,
மண்டலம் - 9,
சென்னை மாநகராட்சி, சென்னை.